பேரூராட்சி அலுவலகம்
லால்பேட்டை

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

<u>ந.க.எண். 02/ 2009 /அ1</u> <u>நாள்: 22.06.2009</u>

<u>**பிற்படுத்தப்பட்ட மான்ய நிதி திட்ட** வேலைகள் 2007-2008</u>.

1. லால்பேட்டை பேரூராட்சிக்கு, பிற்படுத்தப்பட்ட மான்ய நிதி திட்டத்தின் கீழ் 2007–08 ம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணி செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக்கொள்ளப்படும். லால்பேட்டை பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்ததாரர்கள் குறைந்தப் பட்ச தகுதியுடைய பிரிவு 4–ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணிகள் வழங்கப்படும்.

2. லால்பேட்டை பேரூராட்சியில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சாலைப் பணிகளுக்கு அல்லது குறிப்பிட்டுள்ள சில பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் இப் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்க்கப்படுகின்றன.

3. பணிகளுக்கு உரிய ஒப்பந்த படிவங்களை 22.06.2009 முதல் 02.07.2009 பிற்பகல் 4.00 மணி வரை உள்ள வேலை நாட்களில் உரிய தொகையினை லால்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் லால்பேட்டை பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்படிவங்களை பதிவு தபால் அல்லது விரைவு தபால் முலமாகவோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு லால்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.

4. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி டேவணி தொகையை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ செயல் அலுவலர், லால்பேட்டை பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு செல்லத்தக்கது.

5. ஒப்பந்தப்புள்ளிகள் லால்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 03.07.2009 தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் லால்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால், அதற்கு அடுத்த நாள் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

6. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

த.பி.பா….

**பிற்படுத்தப்பட்டபகுதிக்கான மான்ய நிதி திட்டம் 2007–2008.**

| வ.எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பு ரூ | டேவணித் தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை, (வரிகள் உட்பட) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | கொத்தவால் தெரு சிமெண்ட் ரோடு | 6,75,000 | 6750 | 1560/- | 45 நாட்கள் |
| 2. | தெற்கு தெரு சந்து சிமெண்ட் சாலை அமைத்தல் | 3,50,000 | 3500 | 780/- | 45 நாட்கள் |
| 3. | காந்தி தெரு தார்சாலை அமைத்தல் | 2,60,000 | 2600 | 780/- | 45 நாட்கள் |

செயல் அலுவலர்
லால்பேட்டை பேரூராட்சி
கடலூர் மாவட்டம்

பெறுதல்

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், லால்பேட்டை பேரூராட்சி.

நகல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

நகல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

நகல் உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் துறை, கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் இளநிலைப்பொறியாளர், பேரூராட்சிகள், அண்ணாமலை நகர் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்.

நகல் பணி ஆய்வாளர், காட்டுமன்னார் கோயில் பேரூராட்சி தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்.

நகல் பேரூராட்சி மன்றத்தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் லால்பேட்டை பேரூராட்சி மன்றம், தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் விளம்பர பலகைக்கு

www.cuddalore.tn.nic.in